**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

## மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை –10.05.2017

### மாநிலத்தின் கடந்தவாரவானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 20°செ முதல் 25°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### 1. மேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த மூன்று நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 37°செ முதல் 38°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 40 முதல் 45 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14-16 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- ✓ வரும் 3 நாட்களில் 40 முதல் 50 மி.மீகோடை மழை பெற வாய்ப்புள்ளது. எனவே, மானாவாரி மற்றும் இறவை தரிசு நிலங்களில் கோடை உழவு செய்யலாம்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினை மரங்களின் வேரில் சேமிக்கும் வகையில் உள்நோக்கிய வட்டபாத்தியினைசீரமைக்கவும்.
- ✓ அதிக மழையுடன் மணிக்கு 10 கி.மீ க்கு மேல் வேகமான காற்று வீச வாய்ப்புள்ளதால் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். கரும்பில் விட்டம் கட்டவும்.
- ✓ போதிய மண் வெப்பம் நிலவுவதால், மஞ்சள் பயிரிடுவதற்கு நிலம் தயாரித்து விதைப்பு செய்யலாம். மஞ்சள் பயிரின் தேவையை பொறுத்து தாய் கிழங்குகளை விதைப்பதற்கு முன் 100 கிலோ இரும்பு சல்பேட், 50 கிலோ ஜிங் சல்பேட் மற்றும் 1 டன் மக்கிய நாற்கழிவுகளைஅடியுரமாக இடவும்.

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர் அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். பகல் நேர வெப்பநிலையானது 36°செ முதல் 40°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27°செமுதல் 29°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 55 முதல் 75 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 3 முதல் 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- ✓ நெல் தரிசில் பயிரிடப்பட்ட பருத்தி மற்றும் இறவை உளுந்து பயிரில் அசுவினி இலைப்பேன், செம்பேன், தத்துப்பூச்சி மற்றும் வெள்ளை ஈ பரவலான தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த அசாடிராக்டின் 0.03 சதம் (3 மி.லி. / லி) ஒட்டும் திரவத்துடன் கலந்து காலை அல்லது மாலை நேரங்களில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும். சேதம் அதிகரிக்கும் போது இமிடாகுளோபிரிட் 20 எஸ்.எல் 40 மில்லியை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ இறவை உளுந்து பயிருக்கு விதைத்த மூன்றாம் நாள் பெண்டிமெத்தலின் களைக்கொல்லியை ஏக்கருக்கு 1.3 லிட்டர் என்ற அளவில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும்.
- ✓ மாடுகளுக்கு வெப்ப அயர்ச்சியால் ஏற்படும் பால் உற்பத்தி இழப்பை குறைக்க சமையல் சோடாவை தீவனத்துடன் 100 கிராம் என்ற அளவில் கலந்து அளிக்க வேண்டும்.
- ✓ கோடைக்காலங்களில் கால்நடைகள் தீவனம் உட்கொள்ளும் அளவு குறைவாக இருப்பதால் தேவையான அமினோ அமிலங்கள், உயிர்ச்சத்துகள் மற்றும் தாது உப்புகள் போன்ற நுண்ணூட்ட சத்துக்களின் அளவை தீவனத்தில் அதிகரிக்க வேண்டும்.

- ✓ பருவத்திற்கு வந்த மாடுகளை காலை 9.00 மணிக்குள் செயற்கை முறை கருவூட்டல் செய்ய வேண்டும்.

### 3. தெற்கு மண்டலம் -1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் மிதமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதமும் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 34°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 29°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேரகாற்றின் ஈரப்பதம் 45 முதல் 85 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 முதல் 20 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- ✓ பயிர் அறுவடைக்கு பின்பு மிளகாய் மற்றும் மற்ற பயிர்களின் கழிவுகளை வயலிலேயே சுழல் கலப்பை கொண்டு மடக்கி உழவு செய்யவும். இவ்வாறு உழவு செய்வது கோடை மழையினை மண்ணில் சேகரிப்பதுடன் மண்ணின் அங்கக பொருளை அதிகரிக்க உதவும்.
- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிக காற்றினை ஒட்டி பயிர் சாயாமல் தடுப்பதற்காக கரும்பில் அடுத்தடுத்த வரிசைகளில் உள்ள பயிர்களின் தோகையை ஒன்றோடொன்று கட்டவும். அதேபோல் வாழைக்கு மரம் சாயாதவாறு முட்டு கொடுக்கவும்.
- ✓ தற்பொழுது நிலவும் வானிலையில் சோளத்தில் குருத்துஈயின் தாக்குதல் தென்படுகிறது. இக்குருத்து ஈ சோளத்தின் தண்டுகளை துளைத்து உள்ளே சென்று உண்பதால் நடுக்குருத்து வாடி காய்ந்து காணப்படும். இப்பூச்சியினை கட்டுப்படுத்த மீத்தைல் டெமட்டான் 25 இ சி 500 மி.லி./ எக்டர் அல்லது டைமீத்தோயேட் 30 இசி 500 மி.லி./ எக்டர் என் மருந்தை தெளித்து கட்டுப்படுத்தவும்.

### தெற்கு மண்டலம் -2

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 28°செ முதல் 29°செ, மற்ற மாவட்டங்களில் 37°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 22°செ முதல் 23°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 26°செ முதல் 28°செஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 40 முதல் 75 சதவிகிமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 6 முதல் 15 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- ✓ தற்போது நிலவும் பருவநிலையில் மல்லிகையில் மொக்கு துளைப்பான் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் புழு மொக்குகளைத் துளைத்து சாப்பிடும். தாக்கப்பட்ட மொக்குகள் இலேசான மெல்லிய நூலாம்படையில் பின்னப்பட்டிருக்கும். இதனைக் கட்டுப்படுத்த தாக்கப்பட்ட மொக்குகளை புழுக்களுடன் சேகரித்து அழிக்கலாம். மேலும் விளக்குப்பொறி அமைத்து அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். வேப்பங்கொட்டை வடிநீர் 5 சதம் தெளிகக்லாம் அல்லது 1 லிட்டர் தணணீரில் 2 மில்லி மாலத்தியான் கலந்து தெளிக்கலாம். செடிகளை சீரான கவாத்து செய்து, தோட்டத்தை சுத்தமாக வைத்து பராமரிக்க வேண்டும்.
- ✓ தற்போதைய சூழ்நிலையில் மானாவாரி நிலத்திற்கு மட்டுமல்லாமல், நஞ்சை நிலத்திலும் கோடை உழவு செய்வது மிகவும் அவசியமாகும். கோடை உழவு செய்த நிலத்தில், மண்வெடிப்பு உண்டாவதில்லை. இதனால் கோடையில் பெய்யும் மழைநீர் நிலைநிறுத்தப்பட்டு சேமிக்கப்படுகிறது. மேலும் மண்ணில் உள்ள கூட்டுப்புழுக்கள் மற்றும் பூஞ்சாணங்கள் மண்ணின் மேற்புரம் கொண்டுவரப்பட்டு அழிக்கப்படுகின்றன.
- ✓ வெப்பநிலை தொடர்ந்து அதிகமாக காணப்படுவதால் தங்கள் கால்நடைகளுக்கு தினந்தோறும் போதுமான அளவு குளிர்ந்த நீரைக் கொடுக்கவும். ஒரு நாளைக்கு 2-3 தடவை கால்நடைகள் மீது தண்ணீர் தெளித்து விடவும். நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு விலங்குகளுக்கும் 40 முதல் 50 கிராம் தாது உப்பு கலவையினை கொடுப்பது நல்லது.
- ✓ தற்போதைய சூழ்நிலையில் மிளகாயில் போரான் சத்து பற்றாக்குறை காணப்படுகிறது. இதன்

நிறம் தோன்றி இலை ஓரங்களில் பரவும். நடு நரம்புகள் சிவப்பு கலந்த பழுப்பு நிறமாக மாறும், இலைகள் கெட்டியாகி விரைவில் நொறுங்கி விடும். இதனை நிவர்த்தி செய்ய 3 கிராம் போராக் மருந்தினை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து அந்த கரைசலை அறிகுறிகள் மறையும் வரை 10 நாட்கள் இடைவெளியில் இலை வழியாகத் தெளிக்க வேண்டும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களில் இலேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 11°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 50 முதல் 75 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 4-5 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மிளகு பயிரில் இரண்டு ஆண்டுகளாக சுண்ணாம்பு இடாமல் இருந்தால், முதல் கோடை மழைகிடைத்தவுடன் ஒரு செடிக்கு 500 கிராம் சுண்ணாம்பு இடவும்.
- ✓ இஞ்சி பயிருக்கு, கோடை மழைக்குப் பின், மண் நன்றாக உழுது, 1 மீட்டர் அகலம், 25 செ.மீ.உயரம் மற்றும் தேவையான அளவிலான நீளம் உள்ளவாறு பாத்தி அமைத்து, 20 முதல் 25 கிராம் இஞ்சி கிழங்கு உள்ளவாறு தேர்வு செய்து நடவு செய்யவும்.
- ✓ காய்கறி பயிர்களில் சாம்பல் நோயை கட்டுப்படுத்த 15 நாட்களுக்கு ஒரு முறை நனையும் கந்தகம் 2 கிராம்/லிட்டர் தெளிக்கலாம்.
- ✓ லோசனது முதல் மிதமான மழை அடுத்த ஐந்து நாட்களுக்கு எதிர்பார்க்கப்படுகிறது. மிளகுச் செடியில் வாடல் நோயை தடுக்க, ஒரு செடிக்கு 25 கிராம் டிரைகோடெர்மா விரிடி, 25 கிராம் சூடோமோனாஸ் புளூரோஸென்ஸ் மற்றும் 500 கிராம் வேப்பம் புண்ணாக்கு கலந்து இடவும்.

**5. வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் தென்படும். ஒரு சில இடங்களில் இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 39°செ, இரவுநேர வெப்பநிலை 28°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 43 முதல் 72 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 4 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அதிகரித்த மேகமூட்டமும், லேசான மழைக்கும் வாய்ப்புள்ளதால் பகல் வெப்பம் அதிக நேரத்திற்கு உயர்ந்தபட்ச அளவில் இருக்காது. காற்றின் வேகம் அதிகரித்தும் ஈரத்துடன் கூடியதாகவும் வீசும் என்பதால் இரவு வெப்பம் கடந்த வாரங்களைப்போல இல்லாமல் 3°செ வரை குறையக்கூடும். இதன் காரணமாக இதுவரை நிலவி வந்த மிக அதிகமான வெப்ப அதிர்ச்சியும் வெப்ப அயற்சியும் இவ்வாரத்தில் குறைந்து காணப்படும். எனினும் தொடர்ந்து கோழிகளுக்கு கோடைக்கால மேலாண்மையை கடைபிடித்து வரவேண்டும்.
- ✓ தற்போது மானாவரியில் சுரபி இரகம் பருத்தி பயிர் செய்து வருகிறார்கள், இதில் தத்துப்பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக காணப்படுகிறது, இதனைக் கட்டுப்படுத்த வேம்பு சார்ந்த பூச்சிக் கொல்லி அல்லது அசிபெட் என்ற பூச்சிக்கொல்லியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் வீதம் மற்றும் ஒரு மில்லி ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 35°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 29°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது.

*காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 45 முதல் 72 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 3 முதல் 12 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும்.*

**வேளாண் அறிவுரை**

- ✓ *கோழிகளுக்கு வெப்ப அயர்ச்சி நீக்கும் பி காம்ப்ளக்ஸ் வைட்டமின் மருந்துகள் அல்லது ஈரல் டானிக்குகள் போன்ற மருந்துகளை 100 கோழிகளுக்கு 10-20 மில்லி வீதம் குடிநீரில் கலந்து கொடுப்பதால் கோழிகளை வெப்பத்தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.*
- ✓ *கொட்டகையின் மேற்கூரையின் மீது தென்னங்கீற்று அல்லது வைக்கோல் பரப்பி அதன் மீது தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்பத் தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.*
- ✓ *தோட்ட பயிர்களின் வேர் பகுதிகளில் தேங்காய் நார் கொண்டு மூடுவதன் மூலம் மண்ணின் ஈரத்தன்மையை பாதுகாக்கலாம்.*

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

*வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 35°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 27°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 65 முதல் 75 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- ✓ *கோ-கோ : தேவைக்கேற்ப பாத்திகளில் களை எடுத்தல் மற்றும் மூடாக்கு இடுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும்.*
- ✓ *வாழையில் இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த பிராபிகோனோசல் 0.5 மி.லி./ லி. என்ற அளவில் ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்கவும்*
- ✓ *அன்னாசி வயல்களில் மூடாக்கு இடுவதன் மூலம் மண் ஈரப்பதம் வீணாகாமல் தடுக்கலாம்.*

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம்,கோவை**